**முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–1

O.S.No.187/2024

2025 ம் ஆண்டு ஜுன் மாதம் 27 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., முதன்மை சார்பு நீதிபதி(பொறுப்பு), திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. சண்முகம் | வயது: 59 |
| த/பெ. : திரு. ஆறுமுகம் | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதி நிறுவனத்தின் சிறப்பு அதிகாரம் பெற்ற நபர் ஆஜர். பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் வாதி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| 11.3.2024 – சாட்சி பெயரில் ஏற்பட்ட சிறப்பு பொது அதிகார ஆவணம் | அசல் | **வா.சா.ஆ 1** |
| வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது | ஒளி நகல் | **வா.சா.ஆ 2** |
| வா.சா.1 ன் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது | ஒளி நகல் | **வா.சா.ஆ 3** |
| 26.10.2022 – வாதி நிறுவனத்தின் பதிவு சான்றிதழ் | ஆன்லைன் நகல் | **வா.சா.ஆ 4** |
| பிரதிவாதி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட GST பதிவு சான்றிதழ் | ஆன்லைன் நகல் | **வா.சா.ஆ 5** |

| | | |
|---|---|---|
| 1.10.2017 முதல் 31.1.2018 வரை உள்ள வாதி நிறுவனத்தின் வங்கி கணக்கு விவரங்கள் | கணினி நகல் | **வா.சா.ஆ 6** |
| 29.10.2021 – வாதி நிறுவனம் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அஞ்சலக ரசீதுகள் – 2 எண்ணிக்கை | | **வா.சா.ஆ 7** |
| 2.11.2021 – சட்ட அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் | **வா.சா.ஆ 8** |
| 5.11.2021 – சட்ட அறிவிப்பு திருப்பி வந்த கவர் | அசல் | **வா.சா.ஆ 9** |
| 7.1.2022 – பிரதிவாதி வாதி வழக்கறிஞர் அனுப்பிய பதில் அறிவிப்பு அஞ்சலக கவருடன் | அசல் | **வா.சா.ஆ 10** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. **வா.சா.ஆ– 4,5,6** ஆவணங்கள் சட்டப்படி சரியான பிரிவுகளின் அடிப்படையில் குறியீடு செய்யப்படவில்லை என்று ஆட்சேபிக்கப்பட்டது. இந்த ஆட்சேபனை தீர்ப்புரையின் போது கவனத்தில்கொள்ளப்படும்). ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.06.27 15:48:29 +0530

முதன்மை சார்பு நீதிபதி(FAC),
திருப்பூர்.